கையெழுத்தும் வாங்கப்பட்டு வருகிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஓரளவு குறைகள் நீங்கும் என்று தோன்றுகிறது.

SRI K. S. G. HAJA SHERIFF: May I know whether the persons who are put in charge of revision of electoral rolls are paid any allowances or are they asked to work free?

THE HON. SRI C. SUBRAMANIAM: They are paid some allowance.

Artificial Insemination Centres

* 58 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லாவில் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் நிலையங்கள் எத்தனை நிறுவப்பட்டுள்ளன ?

(ஆ) செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் சிகிச்சை எத்தனை தடவை செய்யப்பட்டன ?

(இ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்குள்ளாக மேற்படி ஜில்லாவில் இன்னும் எத்தனை நிலையங்கள் திறக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Nineteen.

(*b*) 302,833.

(*c*) Six.

SRI P. G. MANICKAM: எந்த எந்த ப்ளாக்குகளில் கால்நடை ஆஸ்பத்திரிகள் இல்லாமல் இருக்கிறதோ அங்கேயெல்லாம் கால்நடை ஆஸ்பத்திரிகளை நிறுவுவதற்கு சர்க்கார் கவனம் செலுத்துமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எங்கேயெல்லாம் வசதிகளைப் பெருக்க வேண்டுமோ அங்கே யெல்லாம் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது.

SRI M. P. SUBRAMANIAM: இந்தக் கேள்வியில் கால் நடை என்று குறிப்பிடப்படவில்லை. அதனால் மனிதர்களுக்கும் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன் (சிரிப்பு).

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இது சாத்தியம் இல்லை என்பது கனம் அங்கத்தினருக்கே நன்றாக தெரியும்.

Game hunters

MR. SPEAKER: கேள்வி 59. கனம் அங்கத்தினர் இடத்தில் இல்லாததால் கேள்வியும் பதிலும் சட்டசபை நடவடிக்கையில் அச்சிடப் படும்.

* 59 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) how many licensed game hunters are there in the State;

(*b*) how many deer and other wild animals have been shot by them last year;